21.4.2026

<u>அ.வ.எண்.42/2024</u>

வா.சா.1 ராமசந்திரன் த/பெ. சிவக்குமார்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.5,00,000/- கொடுத்தேன். ஒரே தவணையாக கொடுத்தேனா என்றால் ஒரே தவணையாக தான் கொடுத்தேன். தொகை எப்படி கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். பிரதிவாதிக்கும் எனக்கும் வேறு கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. தாவா கடனை தவிர வேறு வரவு செலவு எதுவும் கிடையாது. பிரதிவாதி என்னிடம் இரண்டு தவணையாக முதலில் ரூ.1,50,000/-மும், இரண்டாவதாக ரூ.2,00,000/-மும் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல.

முதல் தவணையாக பணம் வாங்கும் போது பிரதிவாதியிடம் ரூ.1,50,000/-த்திற்கு ஆக்ஸிஸ் வங்கி காசோலை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டாவது முறையாக ரூ.2,00,000/- ரொக்கமாக கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்சொன்ன ரூ.3,50,000/- கடனுக்காக எனக்கு ரூ.2,75,000/- பணம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வளவு தொகையை வாங்கிக் கொண்டு பிரதிவாதியை தொலைபேசி மூலமாக கெட்டவார்த்தைகளால் திட்டியும், ஆட்களை வீட்டிற்கே அனுப்பி மிரட்டினேன் என்றால் சரியல்ல. மேலும் 10நபர்களுடன் பிரதிவாதி வீட்டிற்கு சென்று அவரை வீட்டிற்குள் அடைத்துவைத்து பணம் கொடுத்தால் தான் வெளியே விடுவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. இது தொடர்பாக காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் பணம் கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்ததால் விசாரித்தார்கள். உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள். அதற்கு சிஎஸ்ஆர் பதிவு செய்தார்களா என்றால் தெரியாது.

பிரதிவாதி என்னிடம் வாங்கி ரூ.3,50,000/- கடனுக்காக அவருக்கு சொந்தமான ரூ.40,00,000/- மதிப்புள்ள மனைநிலத்தை நான் எழுதி கேட்டேன் என்றும், பிரதிவாதி ஒப்புக் கொள்ளவில்லை என்பதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த ரூ.2,75,000/- தொகை போக மீதி தொகை தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. மிராமிசரி நோட் படி ரூ.5,00,000/- கடன் வாங்கியுள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- S.Ramachandran

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.